**தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மீண்டெழும் செலவினங்கள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவின கூற்றின் (ACA 2(ii)) பிரகாரம், ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களுக்காக காசாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 483,270,594 ஆகும், ஆனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள் என மற்றொரு திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 313,630 செலவினம் உள்ளடக்கப்பட்டு ரூபா 483,584,224 ஆக பதிவு செய்யப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றை அச்சிடும் போது ஏற்பட்ட பிழை காரணமாக, சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றில் உள்ள காசுப்பாய்ச்சல் கூற்றில் மாத்திரம் ஆளணி வேதனங்களாகவும் செயற்பாட்டுச் செலவினங்களாகவும் மற்றொரு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 313,630 செலவினம் உள்ளடக்கப்பட்டு ரூபா 483,584,224 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ரூபா 483,270,594 சரியான செலவினம் பதிவு செய்யப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனிநபர் மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் சேர்க்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் கூட்டுமொத்த தொகை ரூபா 437,611 ஆக இருந்ததுடன் இடர்கடன் மீதிகள் உறுப்பினர் கடன் பதிவேட்டில் (CC 10) பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் உறுப்பினர் கடன் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது. | உறுப்பினர் கடன் பதிவேட்டை சரியாக பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### (இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் நீதி அமைச்சிடம் இருந்து கையேற்கப்பட்ட வாகனம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 4,750,000 என மதிப்பிடப்பட்ட போதிலும், அதன் பெறுமதி நிதியல்லாத சொத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 2023 யூன் மாதத்தில் இந்த வாகனம் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### (ஈ) புததகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காதமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(i) நட்டங்கள் தொடர்பான பதிவேடு**<br>நி.பி. 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சேத விபரங்களை பதிவு செய்வதற்கு இதுவரை 02 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ii) வாகன சம்பவக் குறிப்பு புத்தகம்**<br>நிதிப்பிரமாணங்கள் 1645(அ) இன் பிரகாரம் திணைக்களத்தின் 04 வாகனங்கள் தொடர்பான சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 1645(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுப் படிவம் 267 இல் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் ஒவ்வொரு வாகனத்திற்கும் பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 03 (xvii) ஆம் பிரிவு மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டின் போது செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டில் மிகைகள் இருந்தால், அவை ஏனைய செலவினங்களிற்காக பயன்படுத்தப்படாவிட்டாலும் மீளாய்வாண்டில், ரூபா 15,030,000 நிதியேற்பாடுகள் நி.பி. 66 இன் கீழ் 4 செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. செலவின விடயங்களில் இத்தகைய மாற்றத்தின் சதவீதம் 29 சதவீதம் முதல் 231 சதவீதம் வரை இருந்ததுடன் ரூபா 15,030,000 ஒதுக்கீட்டில் 5 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையான விச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | இந்த செலவின விடயங்களுக்காக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் போது குறைவான பாதீட்டு ஒதுக்கீடுகள் பெறப்படுவதாலும், அதற்கென மேலதிக ஒதுக்கீடுகள் செய்யப்படாமலிருப்பதாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாளுக்கு நாள் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிப்பதாலும். மற்றும் மிகவும் அத்தியாவசியமான சேவைகளை பேணுவதற்கு பாதீட்டு ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாததால், தேவையான ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை. நி.பி. 66 இன் கீழான மாற்றம் மூலம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இல்லாத போதிலும் நீதி அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளரின் பங்குபற்றுதலுடன் 2023 ஆம் ஆண்டில் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் இந்த முறைமையின் செயற்திறன் மதிப்பாய்வு செய்யப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுளை முறையாக செயற்படுத்துவதற்காக அக்கபூர்வமான முறைமையொன்று காணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தற்போது திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு பொது நிர்வாக அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| **(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | | |
| நி.பி. 103 (i) உ | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போது நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| நி.பி. 103, 104 | புத்தளம் சமுதாய சீர்திருத்த அலுவலகத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் அழிந்த பொருட்களுக்கு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 103 மற்றும் 104 இன் பிரகாரம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், இந்த தீ விபத்தில் உத்தியோகத்தரிற்கு தொடர்பு உள்ளதா/ இல்லையா என விசாரணை செய்து அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கும் மீண்டும் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| நி.பி. 227 | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் செலவின விபரங்கள் பதிவு செய்யப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் இது சீர்செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| நி.பி. 756(6) | சுற்றறிக்கையின் பிரகாரம் பட்டியலிடப்பட்ட திகதியில் பொருள் மெய்மையாய்வு சபைகளை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் தலைமை அலுவலகம், 09 மாகாண அலுவலகங்கள் மற்றும் 115 பிராந்திய அலுவலகங்களில் இதுவரை பொருள் மெய்மையாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ளன, அவற்றில் 88 அலுவலகங்களில் பரிந்துரைகள் எதுவும் செய்யப்படவில்லை. 27 அலுவலகங்களில் தற்போது பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ii) பொது நிர்வாக சுற்றறிக்கைகள்**<br><br>**2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை** | | | |
| 5.1 ஆம் பந்தி | எரிபொருளின் அளவு மற்றும் ஓடப்படும் தூரம் நாளாந்த ஓட்ட அட்டவணையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இது செய்யப்படவில்லை. | 2023 யூன் முதல் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 3.1 ஆம் பந்தி | 04 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் விடுவிப்பின் ஒதுக்கீட்டு முறைமையால் (quota system) எரிபொருள் பரிசோதனை சாத்தியமில்லை என்றும், எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதால் 2023 யூன் மாதத்தில் எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(iii) அரச நிதி சுற்றறிக்கைகள்** | | | |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | எதிர்வரும் ஆண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் மீளாய்வாண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, அதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் மூலதன திட்டங்களை மாத்திரமே உள்ளடக்கியுள்ளதுடன் 2022 சனவரி 07 இல் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டது. | 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிலிருந்து விரிவான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(iv) அரச கணக்குகள் வழிகாட்டல்கள்** | | | |
| 2022/05 ஆம் இலக்கம் | வழிகாட்டல்களின் பிரகாரம் அறிக்கையிடும் நிறுவனத்தின் அறிக்கைகளிற்குரிய தகவல்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் பற்றிய கூற்று, புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்று மற்றும் காணாமல் போன உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான கூற்று தொடர்பாக திணைக்களத்தால் | 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | அரச கணக்குகள் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நிதிக்கூற்றுக்களில் வெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில், ஐந்து மாகாணங்களில் ஐந்து குறுகிய கால போதைப்பொருள் தடுப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும், ஒன்பது மாகாணங்களில் செயற்திட்ட முகாமைத்துவ குறுகிய கால பயிற்சி கற்கைநெறிகள் தொடர்பான ஒன்பது செயலமர்வுகளும், ஒன்பது மாகாணங்களில் ஒன்பது மக்கள் தொடர்பு மற்றும் தகவல் தொடர்பு திறன் அபிவிருத்தி செயலமர்வுகளும் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் இந்த செயற்பாடுகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பயிற்சி செயலமர்வுகள் 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இருந்து அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டதுடன் 2022 ஏப்ரல் 26 இல் வெளியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை மூலம் விதிக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக நிறுத்தப்பட வேண்டியிருந்தன. | திட்டமிடப்பட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | போதைப்பொருள் தடுப்பு சிகிச்சையை வழங்குவதற்காக இலங்கையில் குறைப்பயன்பாட்டில் உள்ள மருத்துவமனைகளை இனங்காண்பதற்கு சுகாதார அமைச்சு ஆண்டின் போது ஒரு பிரிவை நிறுவுவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இத் திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட குறைப்பயன்பாடுடைய வைத்தியசாலைகளை சிகிச்சை நிலையங்களாக தரமுயர்த்துவதற்கு சுகாதார அமைச்சிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதுடன், நீதி இராஜாங்க அமைச்சரின் அறிவித்தலின் பிரகாரம் 2023 சனவரி 13 ஆம் திகதி இது தொடர்பில் மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் தங்களுடைய பணியை தடையின்றி மேற்கொள்வதற்கு போதிய இடவசதியும் அலுவலக வசதிகளும் வழங்கப்பட வேண்டிய போதிலும் 9 மாகாணங்கள் தொடர்பாக நீதவான் நீதிமன்றங்களில் நிறுவப்பட்டுள்ள 49 சமூக சீர்திருத்த அலுவலகங்களில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், சமூக திருத்த செயன்முறையை செயற்திறனாக அமுல்ப்படுத்துதல் ஒரு தடையாக உள்ளது. | உள்ளுர் சமூக சீர்திருத்த அலுவலகங்களுக்கான இட ஒதுக்கீட்டு கோரிக்கை தொடர்பாக அமைச்சின் செயலாளர் அனைத்து பொறியியல் பிரிவு பொறியியலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். மேலும், பிராந்திய சமுதாய சீர்திருத்த அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு தேவையான இட ஒதுக்கீடு செய்து தர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், பிராந்திய சமுதாய சீர்திருத்த அலுவலகத்தால் பெறப்படும் கோரிக்கைகள் மீது எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரிகள் பணியை தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 246,804 பெறுமதியான மின் சாதனங்கள் மற்றும் மீளாய்வாண்டில் அகற்றப்பட்ட பொருட்கள் பற்றிய தகவல்களை திணைக்களம் கொம்ப்ரோலர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 246,804 பெறுமதியான மின்சாதனங்கள் தொடர்பாக கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்துக்கு தெரிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் கொள்வனவு செய்யப்படும் சொத்துக்கள் தொடர்பாக கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்குத் தெரிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டில் பொருட்கள் கைதவிர்ப்பு செய்யப்பட்டதுடன் பொருட்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட உண்மையான தொகை மற்றும் அழிக்கப்பட்ட பொருட்கள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | கணக்காய்விற்கு உரிய தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டில் கைதவிப்பு செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்காததால், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் அதன் ஒதுக்க பெறுமதி ஆகியவற்றின் சரியான தன்மையை கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியவில்லை. | இத் திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்டு இனங்காணப்படாததால், முறைகேடாகப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் பெறுமதியை நிலையான சொத்துக்களில் இருந்து நீக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் நிலையான சொத்து பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை தொடர்பான 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியில் திருத்தப்பட்டவாறு நிதிப்பிரமாணம் 880 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு தொடர்பான பொது நிதி போன்றவற்றின் பாதுகாப்பு மற்றும் கட்டுக்காப்பிற்குப் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாவார் என்பதுடன் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களால் பிணை வைப்பு செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நி.பி. 315 இல் பிணை வைப்பு செய்யப்பட வேண்டிய | பிணை வைப்பு செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை வைப்பை மேற்கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

கணக்காளர்கள், காசாளர்கள் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர்கள் போன்ற பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் உரிய பிணையை வைப்புச் செய்திருக்கவில்லை.

### 3.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பின்வரும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2023 ஆகஸ்ட் 28 வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 நவம்பர் 11 மற்றும் நவம்பர் 18 ஆகிய திகதிகளில் வழங்கப்பட்ட 2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு திணைக்களம் பதில்களை வழங்கியிருந்த போதிலும் அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய அனைத்து அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் மாதத்தில் இரண்டு கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களுடன் இரண்டு கடிதங்கள் கணக்காய்வு செய்யப்பட்ட சிறைச்சாலை தலைமையகத்தில் உள்ள தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகரிடம் ஒப்படைக்கப்பட்டதென இத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டது. | பதில்கள் ஐயவினாவுடன் தொடர்புடைய அனைத்து அவதானிப்புக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். |

### 3.6 முகாமைத்தவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் 97 கைவிரல் அடையாள இயந்திரங்கள் ரூபா 2,889,145 கிரயத்தில் வழங்கப்பட்டன, ஆனால் தலைமை அலுவலகத்தினால் கட்டுப்படுத்தப்பட்டவாறு பிராந்திய அலுவலகங்களில் தகவல் மீட்டெடுப்பு தரவு முறைமை மேம்படுத்தப்படாததால் அத்தகைய இயந்திரங்களை நிறுவியமை விரும்பிய நோக்கங்களை அடைந்திருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தால் கட்டுப்படுத்தப்படும் தரவு முறைமையை மேம்படுத்துவதற்கு தகவல் முறைமையை மையப்படுத்துதல் (Centralization of Information System) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் முதற்கட்டமாக மேல் மாகாணத்தைச் சேர்ந்த 21 பிராந்திய அலுவலகங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றதெனவும் தெரிவிக்கப்பட்டது. | விரும்பிய இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பணி இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் 05 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா 131,020 இடர் கடன் மற்றும் விழா முற்பண மீதி ரூபா 246,443 இறந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா 246,443 இடர் கடன் மற்றும் விழா முற்பண மீதி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்ட சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் தரப்பில் முறையான ஒழுங்கு விசாரணை தற்போது நிறைவடைந்துள்ளதுடன், இறுதி அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இது வரை ரூபா 246,443 மொத்த கடன் மீதி அறவிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | கடன் மீதி உடனடியாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1. உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு பொது நிர்வாக அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது. | கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில், சிரேஷ்ட பதவியணி தரவரிசையில் 03 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 19 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 15 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப நிலையில் 6 வெற்றிடங்களும் என மொத்தம் 43 வெற்றிடங்கள் திணைக்களத்தில் காணப்பட்டன. | சிரேஷ்ட நிலை பதவிகளில் இரண்டை நிரப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனவும், திணைக்கள உதவி ஆணையாளர் பதவிக்கு திணைக்களத்தில் தகுதியான உத்தியோகத்தர்கள் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. மூன்றாம் நிலை பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செயன்முறை | வெற்றிடமாக உள்ள பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடைபெற்று வருகின்றதெனவும், ஏனைய இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை பதவிகளுக்கு ஒன்லைன் முறைமை (PACIS) மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | திணைக்களத்தில் 2015 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இருந்து முறையே 10 சிரேஷ்ட சமூதாய சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் 01 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. அந்த வழக்கமான பதவிகளிற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பதவி உயர்வு அல்லது ஆட்சேர்ப்பு இல்லாமல் கடமைகளைச் செய்வதற்கு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டனர். | சிரேஷ்ட சமூதாய சீர்திருத்த உத்தியோகத்தர்களின் பத்து பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்காக நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன, மேலும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு ஒன்லைன் முறைமை (PACIS) மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. | வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். |